# இருவார சிப்பாயின் சிந்தனை

2025
ஏப்ரல்
01-15
பாகம்
XL

ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகத்தின் வெளியீடு



ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகம், இராணுவ தலைமையகம் | www.army.lk | 011 2076967

# சிப்பாயின் இதயம்



தங்கமே
இன்னும் பல நாள்
காத்திருக்க வேண்டும் பார்க்க

விடுமுறை வரும் வரை
தொடர்ச்சியாக ஒரு மாதம்
மனதாரப் பெருமூச்சு விட்டு
காத்திருப்பேனே

ஏழு நாட்கள் கடந்து
விடை பெற்று செல்கையில்
எப்படி இருப்பேனோ இன்னும்
கண்களை கசக்கி கொண்டு

வாழ்க்கையில் இனியும் இல்லை
உன்னால் வெற்றிடம்
நீ வீட்டுக்கு வந்ததும்
எனக்கில்லை தனிமை

பொன்னான வார
வாழ்க்கைப் பயணத்தில்
நீ விடை பெருகையில்
இல்லை மகிழ்ச்சி

**சிப்பாய் பண்டார கேஜீடிஎம்வீ**
**14 இசிப**

# உன் இளவரசி

மனதில் தோன்றிய கனவு காண்பது
என்னை மன்னித்து விடு இளவரசனே
பிரமாண்டமான அரண்மனை
இளவரசர்கள்
கிடைப்பதில்லை எங்களுக்கு

அவ்வழி செல்லவில்லையேல்
அது சாபம்
தலைமுறையால் வெளியேற்றப்படுதல்
ஏழைகளாகிய நமக்கு
இயல்பானதே

இளவரசியே அழ வேண்டிய
அவசியமில்லை
இன்றும் அதேதான் நடந்தது
உன் இளவரசியைக் கண்டுபிடி
காப்பாற்றப்படும் தலைமுறை
குற்றம் சாட்டப்படும்



**கோப்ரல் திசநாயக்க டீஎம்என்கே**
**8 விஜப**



# அழியா பிணைப்பு

கொடூர எதிரிகளை துவசம் செய்து
சந்தேகம் அகற்றி சமாதானம்
கொண்டு வந்து
சகோதரராய் இன்ப துன்பம் பகிர்ந்திட
செய்தவை இவற்றையும் மறவேன்

சூரியனை போல் வளைந்து
முன்னோக்கி
ஒன்றாய் கூடி வென்றோம்
இருந்தும் வெற்றி போரினை
சந்தோசமாய் சொல்ல முடியா

**கெப்டன் கேவிஎன் லக்மாலி**
**2 (தொ) இபொசேப**
**ஊடகம் மற்றும் உளவியல் செயல்பாட்டு பணிப்பகம்**

# வாழ்க்கை

வெறுங்கையுடன் பிறந்து
பலதை சேர்த்து
வெள்ளாடை பூண்டு
அனைத்தையும் துறந்துசெல்லும்
ஓர் அம்பலமே இவ்வாழ்க்கை...

இதை அறியா
கொடியவர்கள்
நாடக மேடைதனில்
ஆணவ உடைகளில்
ஆடுகின்றனர் அரைகுறையாய்.....

அனைத்தையும் உணர்கையில்
அகந்தை மிகுதியால் காலம்
கடந்திருக்கும்
மீண்டும் திரும்பி பார்கையில்
நீயும் உணர்வாய்
அன்று பிறர் அனுபவித்த
துயர்தனை...

கோப்ரல் பின்சாரிக்கா டப்ளியுஏபீ
11 இசப
ஊடகம் மற்றும் உசெப

# புத்தகத்தில் இல்லா பாடம்

இடைவெளி அற்ற வாகன நெறுசல் மிகு பெருஞ்சாலையில்
நான்கு சக்கரங்களின் நடுவில் சிக்கிக்கொண்ட சோர்வில்
சற்று தொலைவில் புன்னகையுடன் ஓர் உருவம் கண்டேன்

மிதிவண்டி பெடல்களில் முடிகள் நிறைந்த கால்களை
உறுதியாய் வைத்து
சாயம் போன சட்டையில் நுனியில் மெதுவாய் துடைத்து
இரண்டு ஆடம்பர கார்களுக்கு மத்தியில்
அவர் மெதுவாக ஒரு பாடலை முனுமுனுத்தபடி
முன்னோக்கி நகர்ந்தார்

ஒரு பையில் பாண் ஏந்தி
பல வாகனங்களை கடந்து மாலை காற்றின்
சுகத்தை அனுபவித்து
அவனது மனங்களின் முன்னால் தோற்றதாய் உணர்ந்து
பார்த்திருந்தேன் பொறாமையுடன்

பொறுமையில்லா கோபத்துடன் திட்டும்
மனிதனிடம் கருணையுடன்
புத்தகங்களில் காணப்படாத ஒரு பாடத்தை
அவர் புன்னகையுடன் கற்பிக்க
மாலை இருளில் ஒளிந்து மங்கிப் போகும்
ஒருவரின் கண்கள்
நீண்ட நேரம் சிந்தனையில் மூழ்கியிருந்தேன்

**பெண் பயிலிளவல் அதிகாரி வேணுரி அம்பேபிட்டிய**
**4 இஇமப**
**மருத்துவ பீடம் - ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**


இருவார
சிப்பாயின்
சிந்தனை
ஊடக பணிப்பகத்தின் வெளியீடு